பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

06 06 2024 **THURSDAY** **12.40 PM**

தலைப்புச் செய்திகள்

1. பிஜேபி தலைவர் திரு ஜெ பி நட்டா தலைமையில் கட்சியின் மூத்த தலைவர்களின் கூட்டம் தற்போது தில்லியில் நடைபெற்று வருகிறது.

2. பீகார் மாநிலத்திற்கு சிறப்பு அந்தஸ்து வழங்க வேண்டும் என்று கோரியிருப்பதாகவும், அமைச்சர் பதவி கேட்கவில்லை என்றும் ஐக்கிய ஜனதாதள் கட்சி கூறியுள்ளது.

3. குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்முவை, தலைமை தேர்தல் ஆணையர் திரு ராஜீவ்குமார் தலைமையிலான குழு இன்று சந்திக்கிறது.

4. இந்தியா – அமெரிக்கா இடையிலான நல்லுறவை வலுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

5. உலகக்கோப்பை கால்பந்து போட்டிக்கான தகுதிச்சுற்றுப் போட்டியில் இந்தியா இன்று குவைத்தை எதிர்கொள்கிறது.

-இனி விரிவான செய்திகள்---

<<<<<<<>>>>>>

பிஜேபி தலைவர் திரு ஜெ பி நட்டா தலைமையில் கட்சியின் மூத்த தலைவர்களின் கூட்டம் தற்போது தில்லியில் நடைபெற்று வருகிறது.

இந்த கூட்டத்தில் திரு அமித் ஷா, திரு ராஜ்நாத் சிங் உள்ளிட்ட தலைவர்கள் பங்கேற்று ஆலோசனை மேற்கொண்டு வருகின்றனர்.

இதனிடையே, ஐக்கிய ஜனதாதள் கட்சியின் தலைவரும், பீகார் மாநில முதலமைச்சருமான திரு நிதிஷ்குமாரின் இல்லத்திலும் அக்கட்சியின் மூத்த உறுப்பினர்கள் ஆலோசனை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில், தெலுங்கு தேசம் கட்சித்தலைவர் திரு சந்திரபாபு நாயுடுவின் இல்லத்தில் அக்கட்சியின் மூத்த தலைவர்கள் ஆலோசனை மேற்கொண்டு வருகின்றனர்.

புதிய அரசு அமைப்பது தொடர்பாக அவர்கள் ஆலோசனை நடத்தி வருவதாக தகவல்கள் கூறுகின்றன.

தேசிய ஜனநாயக கூட்டணியின் நாடாளுமன்ற கட்சிக்கூட்டம் நாளை நடைபெறுகிறது.

இந்த கூட்டத்தில் பிஜேபி, தெலுங்கு தேசம் கட்சி, ஐக்கிய ஜனதாதளம், லோக் ஜன்சக்தி கட்சி, ஷிண்டே தலைமையிலான சிவசேனா கட்சி, மதசார்பற்ற ஜனதாதள் கட்சிகளின் மக்களவை உறுப்பினர்கள் பங்கேற்கின்றனர்.

<<<<<<<>>>>>>

தேசிய ஜனநாயக கூட்டணி அரசில் பங்கேற்பதற்கு அமைச்சர் பதவி கேட்கவில்லை என்று ஐக்கிய ஜனதாதள் கட்சியின் செய்தித்தொடர்பாளர் திரு கே சி தியாகி கூறியுள்ளார்.

புதுதில்லியில் எமது செய்தியாளருக்கு அளித்த பேட்டியில், தமது கட்சி நிபந்தனை ஏதும் விதிக்கவில்லை என்று கூறினார்.

அமைச்சர்கள் நியமனம் தொடர்பாக, பிஜேபி தலைவர் திரு ஜெ பி நட்டா மற்றும் திரு ராஜ்நாத் சிங் ஆகியோருக்கு பொறுப்பு வழங்கப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

இதுதொடர்பான ஆலோசனைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

பீகார் மாநிலத்திற்கு சிறப்பு அந்தஸ்து வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும், வறுமை, வேலைவாய்ப்பின்மை, தொழிலாளர் இடம்பெயர்தல் போன்ற பிரச்சினைகளை கையாளுவதற்கு இந்த சிறப்பு அந்தஸ்து உதவும் என்று எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

பீகார் மாநிலத்தில் 12 மக்களவை தொகுதிகளில் ஐக்கிய ஜனதாதள் கட்சி வெற்றிபெற்றுள்ளது.

தேசிய ஜனநாயக கூட்டணி அரசு அமைப்பத்தில் இந்த கட்சி முக்கிய பங்காற்றுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

<<<<<<<>>>>>>

உத்தரப்பிரதேச மாநில முதலமைச்சர் திரு யோகி ஆதித்யநாத், பதவி விலக வேண்டும் என்று சமாஜ்வாதி கட்சியின் செயலர் திரு ஷிவ்பால் யாதவ் கூறியுள்ளார்.

அம்மாநிலத்தில் மக்களவைத் தேர்தலில் பிஜேபி அதிக இடங்களில் வெற்றி பெறாததையடுத்து, தார்மீக அடிப்படையில் அவர் பதவி விலக வேண்டும் என்று திரு ஷிவ்பால் யாதவ் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், முதலமைச்சர் திரு யோகி ஆதித்யநாத் தலைமையில் இன்று சிறப்பு கூட்டம் தொடங்கியது.

பல்வேறு துறைகளின் செயலர்கள் இந்த கூட்டத்தில் கலந்துகொண்டுள்ளனர்.

<<<<<<<>>>>>>

மகாராஷ்ட்ராவில் மக்களவைத் தேர்தலில் தேசியவாத காங்கிரஸ் கட்சியின் அஜித் பவார் பிரிவு தோல்வியை சந்தித்ததையடுத்து, இன்று அக்கட்சியின் ஆலோசனைக்கூட்டம் நடைபெறுகிறது.

இந்த கூட்டத்தில் வரவிருக்கும் சட்டப்பேரவைத் தேர்தல் குறித்த விவாதங்கள் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

செப்டம்பர் அல்லது அக்டோபர் மாதத்தில் நடைபெறவுள்ள சட்டப்பேரவைத் தேர்தல் குறித்த யூகங்களை வகுப்பது தொடர்பாகவும் பிஜேபி-யுடன், கூட்டணி வைத்துக்கொள்வது குறித்து பேசப்படும் என்று தெரிகிறது.

<<<<<<<>>>>>>

தேசிய ஜனநாயக கூட்டணிக்கு தெலுங்கு தேசம் கட்சி முழு ஆதரவு அளித்திருப்பதாக அக்கட்சியின் செய்தித்தொடர்பாளர் திரு பிரேம்குமார் ஜெயின் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அவர் அளித்த பேட்டியில், ஆந்திராவின் முதலமைச்சராக திரு சந்திரபாபு நாயுடு வரும் 12-ஆம்தேதி பதவியேற்கவுள்ளதாகவும், பதவியேற்பு விழாவுக்கு, பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

<<<<<<<>>>>>>

கர்நாடகா ஆளுநர் திரு தாவர்சந்த் கெலாட்டை சந்தித்து, மாநிலத்தில் ஆட்சி கோருவது குறித்து பிஜேபி நடவடிக்கை எடுக்க உள்ளதாக தகவல்கள் கூறுகின்றன.

கர்நாடக மேலவையில் ஆறு இடங்களுக்கான தேர்தல் முடிவுகள் இன்று அறிவிக்கப்பட உள்ள நிலையில், மாநில பிஜேபி இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

இதனிடையே, பாலியல் வழக்கில் சிக்கி கைதாகியுள்ள மதசார்பற்ற ஜனதாதள் சட்டப்பேரவை உறுப்பினர் திரு பிரஜ்வால் ரேவண்ணாவின் நீதிமன்ற காவல் இன்றுடன் முடிவு பெறுகிறது.

<<<<<<<>>>>>>

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு-வை, தலைமை தேர்தல் ஆணையர் திரு ராஜீவ்குமார் இன்று சந்திக்கிறார்.

இந்த சந்திப்பின்போது, தேர்தல் ஆணையர்கள் திரு **Gyanesh Kumar,** திரு **Sukhbir Singh Sandhu** ஆகியோரும் உடன் சென்று, மக்களவைக்கு புதிதாக தேர்வு செய்யப்பட்ட உறுப்பினர்கள் பட்டியலை அளிக்க உள்ளனர்.

<<<<<<<>>>>>>

சென்னை **I I T**-யில் தொழில்நுட்ப திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் இலவசமாக வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**Cloud, Linux, Ticketing** மற்றும் மென்பொருள் வடிவமைப்பு தொடர்பான தொழில்நுட்ப திறனை மேம்படுத்துவதற்கு இம்மாதம் 12-ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஜூலை முதல் வாரத்தில் தொடங்கும் இந்த பயிற்சி திட்டத்தில் விண்ணப்பிக்க விரும்புபவர்கள் **www.lightstorm.net** என்ற இணையதளத்தில் பதிவு செய்து கொள்ளலாம்.

<<<<<<<>>>>>>

சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த தேசிய மாநாடு இன்று சென்னையில் நடைபெறுகிறது.

இன்று காலை தொடங்கிய கூட்டத்தில் நாடு முழுவதிலும் இருந்து சுற்றுச்சூழல் வல்லுநர்கள் பங்கேற்றுள்ளனர்.

மாநில சுற்றுச்சூழல் துறையின் கூடுதல் தலைமைச் செயலர் திருமதி சுப்ரியா சாஹூ தொடங்கி வைத்துள்ள இந்த மாநாட்டில், அதிகரித்துவரும் வெப்பமயமாதல், தென்மேற்கு பருவமழையால் ஏற்பட்டுள்ள சில மாற்றங்கள், பேரிடர் நிர்வாகம், வன பாதுகாப்பு, பேரிடருக்கான ஆயத்தப்பணிகள் போன்றவை குறித்து இந்த மாநாட்டில் விவாதிக்கப்படும்.

பருவநிலை மாற்றத்தால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை சரிசெய்வதற்கு தேவைப்படும் நிதி ஆதாரம், பாதிக்கப்படக்கூடிய இடங்களை கண்டறிந்து அப்பகுதிகளில் வாழும் மக்களுக்கு பாதுகாப்பு வழங்குதல் குறித்தும் இந்த மாநாட்டில் வல்லுநர்கள் ஆலோசனை மேற்கொள்கின்றனர்.

<<<<<<<>>>>>>

உலக ரயில்வே லெவல் கிராசிங் பாதுகாப்பு தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி, ரயில்வேத்துறையின் சார்பில் பாதுகாப்பு விழிப்புணர்வு தொடர்பான நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதுகுறித்து ஒரு செய்தித்தொகுப்பு...

<<<<<<<>>>>>>

உலகிலேயே மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியாவில் நடைபெற்று முடிந்த தேர்தலில் ஜனநாயகம் நிலை நாட்டப்பட்டுள்ளதாக அமெரிக்க செய்தித்தொடர்பாளர் மேத்யூ மில்லர் கூறியுள்ளார்.

இந்த தேர்தலில் பங்கேற்ற மக்களுக்கும், பணியாற்றிய தேர்தல் அதிகாரிகளுக்கும் பாராட்டுகளை தெரிவித்துக்கொள்வதாக கூறியுள்ள அவர், இந்தியாவுடனான நட்பு தொடரும் என்று தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா - இந்தியா உறவுகள் மேலும் வலுப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று அவர் கூறினார்.

அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் **Jake Sulivan** புதிதாக பதவியேற்கவுள்ள அரசுடன் ஆலோசனைகளை மேற்கொள்வார் என்று வெள்ளை மாளிகையின் செய்திக்குறிப்பு கூறுகிறது.

<<<<<<<>>>>>>

உத்தராகண்ட் மாநிலத்தில் கர்நாடகாவை சேர்ந்த மலையேற்ற வீரர்கள் குழு விபத்தில் சிக்கியது.

சகாஹ்ராதல் என்ற இடத்தில் மலையேறிக்கொண்டிருந்த 22 உறுப்பினர்கள் அடங்கிய குழு மோசமான வானிலை காரணமாக விபத்தில் சிக்கியது.

இதில், ஒன்பது பேர் உயிரிழந்திருப்பதாகவும், 13 பேர் இந்திய விமானப்படையின் மூலம் காப்பாற்றப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

கடல் மட்டத்திற்கு மேல் 15 ஆயிரம் அடி உயரத்தில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ள கர்நாடக முதலமைச்சர் திரு சித்தராமையா, மீட்கப்பட்டவர்களை பாதுகாப்புடன் அழைத்து வருமாறு அம்மாநில வருவாய்த்துறை அமைச்சர் கிருஷ்ணா பயர் கவுடாவுக்கு உத்தரவிட்டுள்ளார்.

<<<<<<<>>>>>>

காஷ்மீரில் உள்ள சுற்றுலா தலமான குல்மார்கில் 106 ஆண்டுகள் பழமை வாய்ந்த மகாராணி கோவிலில் தீ விபத்து ஏற்பட்டதையடுத்து, தீயணைப்பு வீரர்கள் உடனடியாக அங்கு சென்று தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

பல திரைப்படங்களில் இடம்பெற்றுள்ள இந்த பிரபலமான ஆலயத்தின் பெரும் பகுதி தீயால் பாதிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

<<<<<<<>>>>>>

அமெரிக்க விண்வெளி வீரர் சுனிதா வில்லியம்ஸ், விண்வெளிக்கு இன்று பயணம் மேற்கொண்டார்.

59 வயதாகும், இந்திய வம்சாவளியை சேர்ந்த சுனிதா முதல் முறையாக விண்வெளி கப்பலில் பயணம் செய்து சாதனை படைத்துள்ளார்.

<<<<<<<>>>>>>

நாட்டின் வடகிழக்கு பகுதிகள், மேற்குவங்கம் மற்றும் சிக்கிம் மாநிலங்களில் அடுத்த ஆறு நாட்களுக்கு பரவலாக மழை பெய்யக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

வடமேற்கு பகுதியில் நாளை வரை பல இடங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜம்மு காஷ்மீர், லடாக், முசாபர்பாத், இமாச்சலப்பிரதேசம் மற்றும் உத்தராகண்ட் மாநிலங்களில் மலைப்பாங்கான பகுதிகளில் அடுத்த நான்கு நாட்களுக்கு இடியுடன் கூடிய மழை பெய்யும் என்று வானிலை அறிக்கை கூறுகிறது.

<<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலகக்கோப்பை கால்பந்து போட்டிக்கான தகுதிச்சுற்றுப் போட்டியில் இந்தியா இன்று குவைத்தை எதிர்கொள்கிறது.

கொல்கத்தாவில் இப்போட்டி இரவு ஏழு மணிக்கு தொடங்குகிறது.

---------

ப்ரெஞ்ச் ஓப்பன் டென்னிஸ் போட்டியில் ஆடவர் இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் ரோகன் போப்பண்ணா – ஆஸ்திரேலியாவின மேத்யூ எப்டன் இணை இன்று இத்தாலியின் **'Simone Bolelli – Andrea Vavassori** இணையை எதிர்கொள்கிறது.

-----------

உலகக்கோப்பை டுவென்டி – டுவென்டி கிரிக்கெட் போட்டியில் அமெரிக்கா இன்று பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

**Dallas-**ல் இரவு ஒன்பது மணிக்கு இப்போட்டி தொடங்குகிறது.

<<<<<<<END>>>>>>